


**27.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. கலாச்சார பெருமைகளுடன் நம்நாடு புதிய எழுச்சிப் பாதையில் பயணிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வர்த்தகமும், தொழில் நுட்பமும், தேசவளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. சென்னை விமான நிலையத்தில் புதிய முனையம் கட்டப்படும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்துறை அமைச்சர் திரு.கிஞ்சரப்பு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 25 இடங்களில் போதை மீட்பு சிகிச்சை மறுவாழ்வு மையங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

5. துபாய் டென்னிஸ் சாம்பியன்பட்ட போட்டிகளின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, ஆஸ்திரேலியாவின் அலெக்ஸி இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖

<u>பிரதமர் – கும்பமேளா</u>

நாட்டின் பெருமைமிகு கலாச்சாரத்தால் நம்தேசம் புதிய சக்தியுடன் முன்னேறி செல்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் மகா கும்பமேளாவை பாராட்டியுள்ள பிரதமர், மாற்றத்திற்கான அத்தியாயம் தொடங்கியுள்ளதாகவும், இதன்மூலம் நம்நாட்டின் எதிர்காலம் எழுச்சியுடன் இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

மகா கும்பமேளாவில் கோடிக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருப்பது சாதனை மட்டுமல்ல என்று கூறிய பிரதமர், வளமிகு பாரம்பரியத்தின் கலாச்சாரத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கான வலுவான அடித்தளம் உருவாக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

140 கோடி இந்தியர்களும் இவ்விழாவில் ஒருங்கிணைந்தது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஐரோப்பிய ஆணையதலைவர் உர்சுலாவுடன் புதுதில்லியில் நாளை இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

2 நாள் பயணமாக இந்தியா வரும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் இன்றுமாலை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்து பேசவுள்ளார்.

கடந்த 2004-ம் ஆண்டுமுதல் இந்தியாவும், ஐரோப்பாவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேற்கொண்டுவரும் நிலையில் இதனை வலுப்படுத்துவது குறித்த ஆலோசனைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖

<u>குடியரசு தலைவர்</u>

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குஜராத் மாநிலம் கெவாடியாவில் சர்தார் வல்லபாய் பட்டேலின் ஒற்றுமை சிலைக்கு இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்

4 நாள் பயணமாக குஜராத் சென்றுள்ள குடியரசு தலைவர் ஏக்தா திறன் மேம்பாட்டு மையத்தை இன்று பார்வையிடுவதோடு அங்கு பயிற்சி பெறுவோரிடையே கலந்துரையாடுகிறார்

தொடர்ந்து அஹமதாபாத் தேசிய ஆடை வடிவமைப்பு கல்விக்கழகத்தின் 44-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் பங்கேற்கவுள்ளார்.

❖❖❖❖❖

<u>நிர்மலா சீதாராமன்</u>

உலகளாவிய சவால்களின் மத்தியிலும் நம்நாடு துரித வளர்ச்சி கண்டுவருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஊடக மாநாட்டில் இன்று உரையாற்றி அவர், சர்வதேச விநியோக சங்கிலி பாதிக்கப் பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

வர்த்தகமும், தொழில் நுட்பமும், வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் என்று கூறியஅவர், இதில் இந்தியாவும் இணைவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், தொழில்நுட்பமும், திறன் வளர்ச்சியும் தேவை என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தேவை தொடர்பான நிலைப்பாடுகளை இந்தியா முன்னிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்திய அவர், நடுத்தர வர்கத்தினர், ஏழை எளிய மக்கள் மற்றும் தொழில்முனைவோரின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.

❖❖❖❖❖

கிஞ்சரப்பு

சென்னை விமானநிலையத்தில் மற்றொரு முனையம் வரும் 26-ம் தேதி திறக்கப்படுவதோடு, புதிய முனையம் கட்டப்படும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்துறை அமைச்சர் திரு.கிஞ்சரப்பு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் உதான் கா.ஃ.பி மையத்தை இன்று திறந்துவைத்து பேசியஅவர், ரயில் டிக்கெட்டுகளின் விலை அதிகரிக்கும் போதெல்லாம் அரசு தொடர்புடைய விமான நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

நம்நாட்டின் எல்லைக்குட்பட்ட எப்பகுதியிலும் பயணம் மேற்கொள்வோருக்கு உதான் திட்டத்தை அதிகரிக்க அரசு திட்டமிட்டிருப்பதாக கூறினார்.

கிழக்கு பிராந்தியத்தின் நுழைவாயிலாக சென்னை திகழ்வதால் விரிவாக்கத்தின் அவசியத்தையும் பரந்தூர் விமான நிலையத்திற்கான ஒப்புதலையும் அவர் வலியுறுத்தினார்.

செயல்திறன் மேம்பாட்டிற்கான பயணிகளின் ஆலோசனைகளுக்காக அரசு திறந்த மனதுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் திறக்கப்பட்ட உதான் கா.ஃ.பி மையம், நாட்டின் அனைத்து விமான நிலையங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்றார்.

தண்ணீர், தேநீர், கா.ஃ.பி, திண்பண்டங்கள், உள்ளூர் இனிப்புகள் போன்றவை 10 ரூபாய் மற்றும் 20 ரூபாய்களுக்கு விற்கப்படுவதால் மக்கள் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டார்.

கொல்கத்தாவில் சென்ற ஆண்டு திறக்கப்பட்ட இத்தகைய மையத்தில் தினசரி 30 ஆயிரம் ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்றதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

பியூஷ்கோயல்

நம்நாட்டில் ஏராளமான வர்த்தக வாய்ப்புகள் குவிந்துள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் வர்த்தக மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இந்தியாவில் தயாரிப்போம்! டிஜிட்டல் இந்தியா ! ஸ்டார்ட்அப் இந்தியா ! சுயசார்பு பாரதம் ! போன்றவற்றின் மூலம் படைப்பாற்றல் திறனும், கட்டமைப்பு மேம்பாடும், பொருளாதார வளர்ச்சியும் இதுவரை இல்லாத அளவு அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

முற்காலங்களில் பொருட்களின் தரம்கேள்வி குறியாக இருந்ததாகவும், ஆனால் தற்போது தரத்தில் புரட்சி ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

உற்பத்தியில் நாம் சிறந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று கூறியஅவர், வர்த்தகத்தில் நிலைத்தன்மை மிக முக்கியமானது என்றார்.

உள்ளடக்கிய வளர்ச்சி பொருளாதாரத்திற்கு இன்றியமையாதது என்று கூறிய அமைச்சர், திறன் மேம்பாடு பொருளாதாரத்தை வலுப்படுத்தி ஏராளமான வேலைவாய்ப்புகளை குவிக்கும் என்றார்.

நமது திறனையும், போட்டியையும் நாம் அதிகரிப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

சர்வதேச பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் முன்னிலை பங்களிப்பை இந்த மாநாடு புலப்படுத்துவதோடு, பரவலான வாய்ப்புகளுக்கான திறவுகோலாக இருக்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖

<u>அஷ்விணி வைஷ்ணவ்</u>

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவிற்காக 16 ஆயிரம் ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பிரயாக்ராஜில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், நான்கு கோடியே 50 லட்சம் பக்தர்கள் ரயில்கள் மூலம் அங்கு பயணம் மேற்கொண்டதாக குறிப்பிட்டார்.

இதற்காக கடந்த இரண்டரை ஆண்டுகளில், 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதி முதலீடு செய்யப்பட்டதாக கூறினார்.

பயணிகள் மற்றும் பக்தர்களின் வசதியை நோக்கமாக கொண்டே இப்பணிகள் நடைபெற்றதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்ட ரயில்வே அலுவலர்களை அமைச்சர் பாராட்டினார்.

❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் சென்னை, செங்கல்பட்டு மாவட்டத்தில் 659 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆயிரத்து 46 அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் திறந்து வைத்தார்.

திருச்சி மாவட்டம் செங்குளத்தில் 116 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 464 அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளையும் திறந்து வைத்தார்.

மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உட்பட 25 இடங்களில் 15 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பில் ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

மேலும் இந்துசமய அறநிலைத்துறை சார்பில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் திருக்கோவில் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியத்தையும் அவர் வழங்கினார்.

❖❖❖❖❖

கே.ஆர். பெரியகருப்பன்

தமிழ்நாட்டில் கோடைகாலத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிகழாவண்ணம் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பகுதியில் 15 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குடிநீர்தொட்டி பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

கே.என். நேரு

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து நிலையம், அடுத்தமாத இறுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் நிலையில் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.**K.N.**நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பேருந்து நிலையம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டாலும், மத்திய பேருந்து நிலையமும், சத்திரம் பேருந்து நிலையமும் தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

சுகந்த மஜும்தார்

காரைக்கால் தேசிய தொழில்நுட்ப கல்விக்கழகத்தின் 15-வது ஆண்டு நிறுவன விழாவை ஒட்டி மத்திய கல்வி இணையமைச்சர் திரு. சுகந்தமஜும்தார் இதன் குடியிருப்பு வளாகத்தை இன்று திறந்துவைக்கிறார்.

ஒருங்கிணைந்த ஆய்வகம் உள்ளிட்ட கல்வி நிறுவனத்தின் கட்டிடங்களையும் அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

முன்னதாக காரைக்கால் ஹெலிகாப்டர் தளத்திற்கு வந்த அமைச்சரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சோமசேகர்ராவ் உள்ளிட்ட உயரதிகாரிகள் வரவேற்றனர்.

❖❖❖❖❖

மீனவர்கள்

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ராமேஸ்வரம் மற்றும் தங்கச்சிமடத்தை சேர்ந்த 27 மீனவர்கள் விமானம் மூலம் இன்று சென்னை வந்தடைந்தனர்.

தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள் விமான நிலையத்தில் இவர்களை வரவேற்று வாகனங்கள் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து எமது செங்கல்பட்டு செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

மதுரை வாய்ஸ்

மதுரை மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் டிராக்டர் ஆப்ரேட்டர் 3-ம் கட்ட பயிற்சிக்கு மதுரை, தேனி உள்ளிட்ட 6 மாவட்டங்களை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின்கீழ் தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

புத்தக திருவிழா

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் 4-வது புத்தகத் திருவிழா வரும் 7-ம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

டென்னிஸ்

துபாய் டென்னிஸ் சாம்பியன்பட்ட போட்டிகளின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, ஆஸ்திரேலியாவின் அலெக்ஸி இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஜெர்மன் ஓப்பன் பேட்மிட்டன் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத், கிரண் ஜார்ஜ், ரக்ஷிதா ராம்ராஜ், உன்னதி ஹூடா ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖